# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT AT MAGISTERIAL LEVEL,PATTUKKOTTAI

| | |
|---|---|
| **STC. No.** | **80/2024** |
| **பெயர்:** | **பாலாஜி** |
| **தந்தை பெயர் :** | **தமிழ்ச்செல்வன்** |
| **வயது:** | **37/2026** |
| **ஊர்:** | **பட்டுக்கோட்டை** |
| **தாலுக்கா** | **பட்டுக்கோட்டை** |
| **வேலை** | **தொழில்** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of **26th day of March 2026**

**<u>ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11.49 AM</u>**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**எதிரி ஆஜர்.**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரான திரு. M.Usha (Assistant) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது).**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால், 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால், Flex fitting தொழில் செய்கிறேன். எனக்கு இந்த Flex fitting வேலையில் இருந்து வருடம் எவ்வளவு வருமானம் வரும் என்றால், ரூ.3,00,000/- வரும்.

2. எதிரியானவர் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால், எனக்கு தெரியாது. எதிரி என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியாது. எதிரி எந்த முறையில் எனக்கு நெருங்கிய நண்பர் என்றால், எதிரியானவர் வாசன் Flex என்ற கடையில் வேலை பார்த்தார், அதன் மூலம் எனக்கு பழக்கம். எதிரியானவரை எனக்கு எத்தனை

வருடமாக தெரியும் என்றால், 10-15 வருடமாக தெரியும். எதிரியானவர் வாசன் Flex என்ற கடையில் வேலை செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல.

3. எதிரியானவர் அவரின் நண்பருடன் வந்து என்னிடம் பணம் கேட்டார் என்று எனது புகார் மனுவில் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். அந்த நண்பரின் பெயர் என்னவென்றால் எனக்கு தெரியாது. எதிரியானவர் என்ன அவசர தேவைக்காக என்னிடம் பணம் கேட்டார் என்றால், அவசரம் என்று தான் கேட்டார், என்ன காரணம் என்று எனக்கு தெரியாது. எதிரியானவர் எந்த தேதியில் வந்து என்னிடம் பணம் கேட்டார் என்றால், 13.03.2023 ஆகும். அந்த பணத்தை எவ்வளவு காலத்தில் திருப்பி தருவதாக என்னிடம் கேட்டார் என்றால், 3 மாதத்தில் திருப்பி தருவதாக கேட்டார். நான் எந்த தேதியில் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால், 13.03.2023 ஆகும்.

4. நான் எதிரிக்கு ரூ.3,50,000/- பணத்தை எந்த தேதியில் கடனாக கொடுத்தேன் என்றால், 13.03.2023 ஆகும். அந்த பணத்தை நான் வங்கியில் இருந்து எடுத்துக்கொடுத்தேனா என்றால், நான் இடத்தை விற்று வைத்திருந்த பணத்தில் இருந்து எடுத்துக்கொடுத்தேன். நான் எப்போது, எந்த தேதியில் எவ்வளவு ரூபாய்க்கு இடத்தை விற்றேன் என்றால், ரூ.12,50,000/- த்திற்கு சுமார் 50 குழி பரப்பளவு கொண்ட இடத்தை ஜனவரி 2023 ஆம் ஆண்டு விற்றேன். நான் இடம் விற்றதற்கான ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்யவில்லை.

5. நான் ரூ.3,50,000/- பணத்தை யார் முன்னிலையில் எதிரிக்கு கொடுத்தேன் என்றால், நான், எதிரி மற்றும் எதிரியின் நண்பர் முன்னிலையில் கொடுத்தேன். எங்கு வைத்து பணத்தை கொடுத்தேன் என்றால், பட்டுக்கோட்டை அந்தோணியார் கோவில் முகவரியில் உள்ள என்னுடைய வீட்டில் வைத்து கொடுத்தேன். நான் எதிரிக்கு பணம் கொடுக்கும்போது என்னுடைய குடும்பத்தினர் இருந்தார்களா என்றால், இல்லை. நான் சொல்வதுபோல் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள தேதியன்று எதிரியானவர் என்னுடைய வீட்டிற்கு வரவில்லை என்றும், என்னிடம் ரூ.3,50,000/- பணத்தை வாங்கவில்லை என்றும், நான்

பொய்யாக சொல்லுகிறேன் என்றால், சரியல்ல. உண்மையிலேயே எதிரியானவர் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள தேதியன்று என் வீட்டிற்கு வந்து பணம் வாங்கியிருந்தால் என் குடும்ப உறுப்பினர்களையும் இவ்வழக்கில் சாட்சியாக போட்டிருப்பேன் என்று சொன்னால், சரியல்ல.

6. என் புகார் மனுவில் நான் மீண்டும் எதிரி அவரின் நண்பருடன் வந்தார் என்று கூறியுள்ளேன் என்று சொன்னால், சரிதான். எந்த தேதியில் மீண்டும் வந்தார் என்றால், 24.05.2023 ஆகும். அன்றைய தேதியில் வந்து எதிரியானவர் எவ்வளவு பணம் பெற்றார் என்றால், ரூ.3,00,000/- ஆகும். 24.05.2023 ஆம் தேதி எதிரியுடன் வந்த நண்பரின் பெயர், ஊர் என்னவென்றால், எதிரியானவர், அவரின் நண்பரின் ஊர் பண்ணவயல் என்று மட்டும்தான் சொன்னார், அவரின் பெயர் எனக்கு தெரியாது. ரூ.3,00,000/-த்தை நான் எங்கு வைத்து எதிரிக்கு கொடுத்தேன் என்றால், பட்டுக்கோட்டை அந்தோணியார் கோவில் முகவரியில் உள்ள என்னுடைய வீட்டில் வைத்து கொடுத்தேன். ரூ.3,00,000/-த்தை நான் யார் முன்னிலையில் வைத்துது கொடுத்தேன் என்றால், நான், எதிரி மற்றும் எதிரியின் நண்பர் முன்னிலையில் வைத்து கொடுத்தேன்.

7. பொதுவாக ஒரு நபர் கடன் வாங்கிய பின் அந்த கடனை திருப்பி கொடுக்கவில்லை என்றால் மீண்டும் அந்த நபருக்கு கடன்கொடுக்கமாட்டார்கள் என்று சொன்னால், சரிதான், என்னுடைய நண்பர் என்பதால்தான் நான் மீண்டும் கடன்கொடுத்தேன். என்னுடைய புகார்மனுவில் எதிரியானவர் என்னிடம் 13.03.2023 அன்று ரூ.3,50,000/- பெற்றுக்கொண்டதாகவும், மீண்டும் 24.05.2023 அன்று ரூ.3,00,000/-த்தை பெற்றுக்கொண்டதாக நான் கூறியுள்ளேன் என்று சொன்னால், சரிதான்.மேற்கண்ட தொகையான ரூ.3,50,000/- மற்றும் ரூ.3,00,000/-த்திற்கு எதிரியிடம் என்ன ஆவணம் பெற்று அந்த பணத்தை கொடுத்தேன் என்றால், எதிரியானவர் எனக்கு காசோலையை பூர்த்தி செய்து கொடுத்தார். எந்த தேதியில் எதிரியானவர் காசோலையை கொடுத்தார் என்றால், 13.09.2023 ஆகும். அந்த காசோலை ரூ.3,50,000/-த்திற்கு கொடுத்த காசோலையா அல்லது ரூ.3,00,000/-த்திற்கு கொடுத்த காசோலையா என்றால், இரண்டிற்கும் சேர்த்து ஒரு காசோலையை தான் கொடுத்தார். ரூ.3,00,000/-த்தை வங்கியில் இருந்து எடுத்து எதிரிக்கு

கொடுத்தேனா என்றால், இல்லை, வீட்டில் இருந்து எடுத்துக்கொடுத்தேன்.

8. income Tax Assesse -ஆ என்றால் இல்லை.

9. 13.03.2023 என்ற தேதியில் ரூ.3,50,000/-த்தை எதிரிக்கு கொடுத்ததற்கு எதிரியானவர் அதற்கு என்னிடம் என்ன ஆவணம் கொடுத்தார் என்றால், ஒரு கடன்உறுதி சீட்டு கொடுத்தார், அந்த கடன் உறுதி சீட்டை நான் இரண்டாவது கடன் கொடுக்கும்போது அதை பெற்றுக்கொண்டு என்னிடம் காசோலை கொடுத்தார்.

10. நான் என்னுடைய புகார் மனுவில் கூறியதுபோல் எதிரியானவர் எந்த கடனும் வாங்கவில்லை என்றும்,அதற்கு எதிரியானவர் கடன்உறுதி சீட்டும், காசோலையும் கொடுக்கவில்லை என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம் 12:26 PM**

**(எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/-திரு. மா. விசால் ஆனந்த்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.